## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை- பிறருடன் பேசித் தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள, மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் மாற்று வழியில் பிறருடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில், பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட மென்பொருளுடன் கூடிய உபகரணம் (AVAZ) 300 எண்ணிக்கையில் வாங்கி வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை

அரசாணை (நிலை) எண்.09

நாள்: 29.09.2021
பிலவ, புரட்டாசி 13,
திருவள்ளுவர் ஆண்டு, 2052.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்:38, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 01.12.2016
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், கடித எண்.00103/உ.உ.பிரிவு/2020, நாள் 10.01.2020.

******

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நேரடியாக பிறருடன் பேசி தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் மாற்று வழியில் பிறருடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில், பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட கணினி மென்பொருளுடன் கூடிய உபகரணத்தை (Augumentative and Alternative Communication system Device (AAC) with AVAZ Software) 416 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு வாங்கி வழங்கிட 2016-2017-ஆம் ஆண்டின் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் (TANII) ரூ.106.46 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், 2016-2017 ஆண்டின் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் (TANII) மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட, புற உலக சிந்தையில்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மாற்று வழியில் பிறருடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில் AVAZ உபகரணங்கள் 281 எண்ணிக்கையில் 32 மாவட்டங்களில் உள்ள 238 அரசு அங்கீகாரம் பெற்ற மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு விட்டது என்றும் மேற்படி திட்டமானது மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் மத்தியில் அதிக வரவேற்பு பெற்றுள்ளதால் அதனை விரிவுபடுத்தும் நோக்கில் 32 மாவட்டங்களில் உள்ள விடுபட்ட மனவளர்ச்சி குன்றிய சிறப்பு பள்ளிகளுக்கும் மற்றும் ஏற்கனவே வழங்கப்பட்ட சிறப்பு பள்ளிகளுக்கு கூடுதலாக ஒரு உபகரணம் என மொத்தம் 300 எண்ணிக்கையிலான AVAZ உபகரணங்கள் வாங்கி வழங்கிட ரூ.1,23,75,800/- நிதி ஒதுக்கீடு வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. மேற்காணும், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின், கருத்துருவினை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று, நேரடியாக பிறருடன் பேசித் தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள, மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் மாற்று வழியில் பிறருடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில், பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட மென்பொருளுடன் கூடிய உபகரணம் (AVAZ) 300 எண்ணிக்கையில் வாங்கிட ரூ.1,23,75,800/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து எண்ணூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | | |
|---|---|---|
| "2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன்– 101 மாற்றுத்திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் –MZ பெருமூளை வாத நோயால் பாதிக்கப்பட்டோருக்கான மேம்படுத்தப்பட்ட மற்றும் மாற்று தகவல் தொடர்பு முறை – 324 பொருட்களும் வழங்கலும் – 01 பொருட்களும் வழங்கலும்" [IFHRMS த.தொ.கு. 2235 – 02 -101 –MZ – 32401] | - | ரூ.1,20,52,500/- |
| 308 விளம்பரமும் பிரச்சாரமும் – 01 விளம்பரக் கட்டணங்கள் [IFHRMS த.தொ.கு. 2235 – 02 -101 –MZ – 30801] | - | ரூ.24,009/- |
| 372 பயிற்சி – 01 பயிற்சி [IFHRMS த.தொ.கு. 2235 – 02 -101 –MZ – 37201] | - | ரூ.2,99,291/- |

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான நிதி ரூ.1,23,75,800/- 2021-2022-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் "2235 – 02 – 101-MZ–32401 பொருட்களும் வழங்கலும்" என்ற கணக்குத் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1,23,77,000/- நிதியிலிருந்து விளம்பரக் கட்டணங்கள் மற்றும் பயிற்சி என்ற கணக்குத் தலைப்பிற்கு மறுநிதியொதுக்கத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (சந)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா. எண்.39163, நிதி (சந)/2021, நாள் 27.09.2021-இல் பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப்பப் பேரேடு எண்.460 (நானூற்று அறுபது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.

அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
நிதி (சந/வ.செ.பொ-II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
அரசு செயலரின் முதுநிலை முதன்மைச் தனிச்செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்